

முரசொலி செல்வம் மாமா உடலால் மறைந்தாலும்

எழுத்தாகவும், கருத்தாகவும் என்றென்றும் நம்மை வழிநடத்துவார்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ட்விட்டரில் புகழாரம்!

சென்னை, அக்.11- முரசொலி செல்வம் மாமா அவர்கள் உடலால் மறைந்தாலும் எழுத்தாகவும், கருத்தாகவும் என்றென்றும் நம்மை வழிநடத்துவார் என சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்து ள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:-

திராவிட இயக்கத்தின் கொள்கை முரசு முரசொலி செல்வம் மாமா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நேற்று.

முரசொலி அலுவலக வளாகம் மற்றும் கோபாலபுரத்தில் உள்ள செல்வம் மாமாவின் இல்லம் ஆகிய இடங்களில் அவரது திருவுருவப் படத்துக்கு மலர்தூவி மரியாதைச் செலுத்தினோம்.

பேரறிஞர் அண்ணா முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனதில் தனி இடம்பிடித்தவர்.



கழகத்தலைவர் அவர்களின் பாசத்துக்குரியவராக என்றும் துணை நின்றவர்.

பொதுவாழ்வில் எனக்கு பக்க பலமாக நின்று வழிகாட்டி ஊக்கப்படுத்தியவர்.

திராவிட இயக்கம் நோக்கி வரும் இளைஞர்களை அரவணைத்து பல்வேறு உயரங்களுக்கு ஏற்றி விட்ட பெருமைக்குரியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர் களின் மூத்த பிள்ளையாம் முரசொ லியின் ஆசிரியராக 35 ஆண்டு காலம் அவர் ஆற்றிய எழுத்துப் பணி கழக வரலாற்றில் என்றைக் கும் அசைக்க முடியாத அத்தியா யம்.

முரசொலி செல்வம் மாமா அவர் கள் உடலால் மறைந்தாலும் எழுத் தாகவும் கருத்தாகவும் என்றென் றும் நம்மை வழிநடத்துவார்!

வாழ்க அவர் புகழ்!

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!



செஞ்சி, அக்.11- விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுகஅவசர செயற்குழு ஆலோச னைக் கூட்டம் நடை பெறுவதாக விழுப்புரம் வடக்கு மாவட்ட செய லாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ் தான் தெரிவித்துள்ளார் இதுகுறித்து அவரது அறிக்கையில் கூறுகை யில்

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மைலம் மற்றும் திண்டி வனம் சட்டமன்ற தொகுதிகளுக்கான திமு கஅவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலை வர் டாக்டர் ப. சேகர் தலைமையில்,முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன் மு ன் னி லை யி ல் 13.10.2026 செவ்வாய்க்கி ழமை காலை 11.00 மணி அளவில் செஞ்சி திரு வண்ணாமலை சாலை யில் உள்ள தமிழ் திரும கள் திருமண மண்ட பத்தில் நடைபெறுகி றது.

கூட்டத்தில் தலை மை க் க ழ க ப் பிரதிநிதிகள் புதுவை மாநில திமுக அமைப் பாளர் புதுவை இரா. சிவா,மாநில மாணவ ரணி செயலாளர் ஜெ. வீரமணி ஆகியோர் பங் கேற்கின்றனர்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், த லை மை செ ய ற் குழு,பொதுக்குழு உறுப் பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலா ளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பா ளர்கள்,உள்ளாட்சி பிர திநிதிகள்,நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண் டும்என விழுப்புரம் வடக்கு மாவட்ட செய லாளர், முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ் தான் தனது அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

பொருள்:

1. 22.08.2026அன்று சென்னை அண்ணா அறி வாலயத்தில் கழகத் தலை வர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் அறிவித்த கழக நிர்வாக மு று சீ ர மை ப் பு தீர்மானங்களை செயல் படுத்துதல் சம்பந்தமாக,

2. ஒன்றிய,நகர, பேரூர் கழக அமைப்பு களை விரிவாக்கம் செய் வது சம்பந்தமாக

3.கழக ஆக்கப்பணி கள் சம்மந்தமாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!



திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே. பழனிசாமி

அக்டோபர் 11 (2016)



தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

1960ஆம் ஆண்டு தர்காஸ் கண்டிகை என்ற தனது கிராமத்தில் கிளைக் கழகத்தை துவக்கி பதினேழு ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும் பின்னர், திருப்பெரும்புதூர் வட்டக் கழகப் பிரதிநிதியாகவும், தொடர்ந்து குன்றத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

1996ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.